## இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள

# மீனவர்கள் - மீன்பிடி படகுகளை விடுவித்திட தூதரக நடவடிக்கை எடுத்திடுக!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவு துறை அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, ஜன.10-

காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்கள் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது எல்லை தாண்டி மீன்பிடித்ததாக அவர்களை இலங்கைக் கடற்படையினர் 08.01.2025 அன்று கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள 10 மீனவர்களையும், இலங்கை வசம் ஏற்கெனவே உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (09.01.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 இந்திய மீனவர்களையும் அவர்களது மீன்பிடி விசைப்படகையும் 08.01.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், கைது செய்யப்பட்ட 10 மீனவர்களில், 6 மீனவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் (5 பேர் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒருவர் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்) என்று குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு மீன்பிடித் தொழிலை மட்டுமே பெரிதும் நம்பியுள்ளதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினர் இதுபோன்று மீனவர்களைச் சிறைபிடிப்பதால், அவர்களது குடும்பத்தினர் மிகுந்த துயரத்திற்கு ஆளாகியுள்ளனர் என்றும், தற்போதைய நிலவரப்படி 102 மீனவர்களும், 210 மீன்பிடிப்படகுகளும் இலங்கைவசம் உள்ளதாகவும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

எனவே, உரிய தூதரக வழிமுறைகளை முன்னெடுத்து, இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க உடனடிநடவடிக்கைகளைஎடுக்கவேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டக் கழக நெசவாளர் அணி துணை அமைப்பாளர், நம் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த எம்.கே.மூர்த்தியின் மூத்த சகோதரி ஆர்.வாசுகி, உடல்நலக் குறைவால் மறைவுற்ற செய்தியறிந்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருவல்லிக்கேணி பகுதி, சிவராஜபுரதில் உள்ள அவர்களுடைய இல்லம் சென்று வாசுகி அவர்களின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மூர்த்தி மற்றும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார். தயாநிதிமாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜர் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

## திருப்பதி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த

# சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை. ஜன. 10 -

ஆந்திர மாநிலம், திருமலை திருப்பதி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்த செய்திக் குறிப்பு வருமாறு:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி கிராமம், தாசனூரைச் சேர்ந்த திருமதி மல்லிகா (வயது 55) க/பெ. கிருஷ்ணன் நேற்று முன்தினம் (08.01.2025) ஆந்திர மாநிலம், திருமலை திருப்பதி கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய சென்றிருந்தபோது, அங்குள்ள சொர்க்கவாசல் திறப்பிற்கான வழங்கப்பட்ட இலவச தரிசனத்திற்கான நுழைவுச்சீட்டை வாங்கும்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தத் துயரமான செய்தியை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் உடனடியாகத் தெரிவித்துக் கொண்டதுடன், உயிரிழந்த திருமதி மல்லிகா அவர்களின் உடலை அவரது சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சார்பில் மேற்கொள்ள உத்தரவிட்டார்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த திருமதி மல்லிகா அவர்களின் குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கல்வி உரிமையைப் பறிக்கும் ஒன்றிய அரசின் பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு விதிமுறைகளைக் கண்டித்து – இன்று

# மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### கழக மாணவர் அணியினர் பங்கேற்க அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஜன. 10-

கல்வி உரிமையைப் பறிக்கும் ஒன்றிய அரசின் பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு விதி முறைகளைக் கண்டித்து இன்று, மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (Federation of Students Organisation - Tamil Nadu) சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் கழக மாணவர் அணியினர் பங்கேற்க வேண்டுமாய் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கும் கல்வி உரிமையையும், மாநில உரிமையையும் பறிப்பதற்கு ஒன்றியத்தில் ஆட்சி செய்யும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. பாசிச அரசு தொடர் முயற்சிகளைச் செய்து வருகிறது. தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில் எளிய மக்களின் கல்வியைக் கபளீகரம் செய்வதற்கும், சமூகநீதியைப் பறிப்பதற்கும் செய்த முயற்சிகளைத் தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கிறது. எனவே, எப்படியேனும் அதைத் தமிழ்நாட்டில் கொண்டுவந்து தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைத் தடுக்கத் தனது அனைத்து அதிகாரங்களையும், வழிகளையும் பயன்படுத்துகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

அண்மையில் (0601 2025) பல்கலைக்கழக மானியக் குழு வெளியிட்டுள்ள வரைவு விதிமுறைகள், ஒன்றிய பா.ஜ.க. அரசின் கெடு நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. பல்கலைக்கழகங்களின் தனித்தன்மையை, தன்னாட்சியை ஒழித்து, அனைத்தையும் பல்கலைக்கழக மானியக் குழுவின் பெயரால், ஆளுநரின் பெயரால் ஒன்றிய அரசே அபகரிக்கும் திட்டமே, பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை நியமிக்கும் வரைவு நடைமுறை ஆகும்.

தரப்படுத்துதல் என்பது போன்ற மாய்மால வார்த்தைகளைப் பயன்படுத்தி, தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காத மாநிலங்களின் மீது அதனைத் திணிக்க பல்வேறு வகையான அதிகார வரம்பு மீறல்களைத் தொடர்ந்து செய்துவருகிறது. அதன் மொத்த வெளிப்பாடுதான் பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு அறிக்கை. அதனை 'மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (FSOTN)' முற்றாக நிராகரிக்கிறது.

கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரவும், சமூகநீதியைப் பாதுகாக்கவும், 'அனைவருக்கும் அனைத்தும்' என்ற நிலையை எட்டுவதற்கும் தடையாக அமையும் எதையும் ஒழிப்பது என்றும் உறுதி ஏற்கும் வகையில் பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு விதிமுறைகள் 2025 [Draft UGC (Minimum Qualifications for Appointment and Promotion of Teachers and Academic Staff in Universities and Colleges and Measures for the Maintenance of Standards in Higher Education) Regulations, 2025] என்பதைக் கண்டித்தும், மாணவர்களின் எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையிலும், இந்தியா முழுவதும் உள்ள கல்வியாளர்கள், மாணவர்களிடம் இதன் ஆபத்தை எடுத்துரைக்கும் வகையிலும், முதல் கட்டமாக, இன்று (10.01.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு நடத்தவுள்ளது.

அடுத்தடுத்த நடவடிக்கைகளாக, மாவட்ட அளவில் கருத்தரங்குகளையும், போராட்டங்களையும், கையெழுத்து இயக்கத்தையும் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்படுகிறது. மாணவர்கள் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையிலும், ஒன்றிய அரசு கல்வித் துறை மீது நடத்திவரும் தாக்குதலை வெகு மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையிலும், அனைத்து வகைப் பிரச்சாரங்களிலும் ஈடுபடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், கல்லூரி மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள், தோழர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு, குமரி ஒலிக்கும் நமது கண்டனக் குரல் செங்கோட்டையில் அமர்ந்திருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் செவிப்பறையை கிழிக்கச் செய்திட அடலேறுகளே அணி திரண்டு வாரீர்.. வாரீர்... என அழைக்கிறேன்.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் அறிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒருங்கிணைப்பாளர்கள்,
மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு. (FSOTN)
தி.மு.க. மாணவர் அணி,
இந்திய மாணவர் சங்கம் (SFI),
திராவிட மாணவர் கழகம்,
ம.தி.மு.க. மாணவர் அணி,
அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் (AISF),
முற்போக்கு மாணவர் கழகம் (RSF),
முஸ்லிம் மாணவர் பேரவை (MSF),
சமூகநீதி மாணவர் இயக்கம் (SMI),
மாணவர் இந்தியா,
கேம்பஸ் ஃபிரண்ட் ஆஃப் இந்தியா (CFI),
அனைத்திந்திய கிராமப்புற மாணவர் சங்கம்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாணவர் அணி,
தமிழ்நாடு மாணவர் முன்னணி (TSF) மற்றும் பல்வேறு மாணவர் அமைப்புகள் உள்ளிட்ட
மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு. (FSOTN) கலந்து கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## மாநில உரிமைகளைக் காக்க

# நமது முதல்வர் ஏற்றியுள்ள தீ; அனைத்து மாநிலங்களுக்கும் பரவட்டும்!

### சட்டப்பேரவையில் – முதல்வர் கொண்டுவந்த தனித் தீர்மானம் மீதான விவாதத்தில் – கழகம் சார்பில் சி.வி.எம்.பி.எழிலரசன் பேச்சு!

**சென்னை, ஜன. 10 – சட்டப்பேரவையில் நேற்று, முதல்வர் கொண்டு வந்த தனித் தீர்மானம் மீதான விவாதத்தில் கழகம் சார்பில் கலந்துகொண்டு பேசிய காஞ்சிபுரம் தொகுதி எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி. எழிலரசன், "மாநில உரிமையினைக் காக்க, முதல்வர் ஏற்றியுள்ள தீ, அனைத்து மாநிலங்களுக்கும் பரவட்டும்!' என்று குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

நம்முடைய அரசமைப்புச் சட்டத்தினை வழங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள், மக்களுடைய கல்வி அறிவினை அந்தந்த மாநிலம்தான் நிர்ணயிக்க முடியும் என்பதை உணர்ந்து, மாநில அரசின் பட்டியலுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு பறிக்கக்கூடிய நிலைகளை நடத்திக் கொண்டிருப்பதை நாடறியும். 2016 ஆம் ஆண்டு, தேசிய கல்விக் கொள்கை வரைவை ஏற்படுத்துவதற்கான குழுவை அமைத்தபோது மறைந்தும், எங்கள் நெஞ்சில் நிலைத்து நிற்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்றைக்கே அதைக் கண்டித்து இது மாபெரும் தவறான போக்கு; இது மாநிலத்தின் உரிமையையும், கல்வி உரிமையினையும் பறிக்கக்கூடியது என்று கண்டன அறிக்கையை வெளியிட்டு இருந்தார்கள்.

இந்த நிலையிலும் 2019 ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கை, 2019 என்று வரைவினை வழங்கிய போது அதுகுறித்த கருத்துக்களை பொதுமக்கள், கல்வியாளர்கள் எல்லோரும் வழங்கலாம் என்று சொல்லி இருந்தாலும்கூட, இந்தியிலும், ஆங்கிலத்திலும் மட்டுமே மொழியாக்கம் செய்யப்பட்ட வரைவினை வெளியிட்டு அந்தக் கருத்தினை கேட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராகவும், அன்றைய எதிர்க்கட்சி தலைவராகிய இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், முதலில் கண்டன குரலை எழுப்பி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, மொழிபெயர்க்கப்பட்ட பிறகுதான், கால நீட்டிப்பு வழங்கப்பட்டு முறையான கருத்து கேட்பு நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதோடு மட்டும் நின்றுவிடாமல், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும், எந்த இயக்கமும், எந்த கட்சியும், எந்த மாநிலத்தினுடைய அரசும் முன்னெடுக்காத ஒன்றை தமிழ்நாட்டின் அன்றைய பிரதான எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய எங்களுடைய தலைவர் முதலில் அதனை ஆய்வு செய்வதற்கான ஒரு குழுவினை அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக என்னென்னலாம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையெல்லாம் ஆய்வுசெய்து, 484 பக்கங்களும் ஆய்வு செய்யப்பட்டு இது ஒட்டுமொத்தமாய் அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது; எதிரானது, மாநில உரிமைக்கு எதிரானது; கல்வி உரிமைக்கு எதிரானது; சமூக நீதிக்கு எதிரானது; சமத்துவத்திற்கு எதிரானது என்று அதனை குறித்து எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, இறுதியாய், மிக முக்கியமாய் இதை anti-scientific temper என்று சொல்லியிருக்கிறார். இது அறிவியில்ரீதியான அணுகுமுறைக்கு எதிரானது என்ற கருத்தியலை மிக வலிமையாக இந்தியாவில் முழக்கமிட்ட ஒரே தலைவர்; எங்களுடைய தலைவர்; இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அறிக்கையைத் தந்து, இது ஒட்டுமொத்தமாக it has to be scrapped என்று சொன்னார். இந்த வரைவு அறிக்கை ஒட்டுமொத்தமாக கிழித்து எறிய வேண்டியது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சொல்லப்பட்டது.

அந்த வகையில் தேசிய வளர்ச்சிக் கல்வியை ஒட்டிதான், தொடர்ந்து இன்றைக்கு மாநில உரிமைகளை பறிக்கக்கூடிய வகையில் நடந்துகொண்டிருக்கிறது. அதில் இன்றைக்கு UGC என்ற முறையில் பல்கலைக்கழக நிதி நல்கை குழு மூலமாக இன்றைக்கு வழங்கியிருக்கக் கூடிய இந்த வரைவு அறிக்கை என்பது 30 நாட்களுக்குள் கருத்தை வழங்க வேண்டும் என்று சொல்வதே தவறு. அதற்கு காலம் ஒழுங்காக கொடுத்திருக்க வேண்டும் ஒன்று. இரண்டாவது மொழியாக்கம் செய்யாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது; அது தடுக்கப்பட வேண்டும். மூன்றவாது மாநில அரசின் உரிமைகளை பறிக்கக்கூடிய வகையில் இந்த அறிக்கை இருக்கிறது என்பதைத்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மிக குறிப்பாகச் சொல்லி யிருக்கிறார். எனவே, ஒட்டுமொத்தமாய் இது எதிர்ப்புக்குரியது, கண்டனத்திற்குரியது.

அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய எதிர்ப்பை நாங்கள் இங்கே பதிவு செய்கிறோம். அதேநேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட முற்போக்கு சக்திகளாக இங்கே இருக்கக் கூடிய அத்துணை அரசியல் கட்சிகளும் இணைந்து, நாளை மாபெரும் ஆர்ப்பாட்டத்தையும் நாங்கள் அறிவித்து இருக்கிறோம். எனவே, ஒன்றை நான் சொல்லி நிறைவு செய்ய விரும்புகிறேன். இந்த தீ; இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்றியிருக்கின்ற தீ; தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்றிருக்கின்ற இந்த தீ இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பரவட்டும், பரவட்டும் என்று சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் சார்பில் இதனை கண்டித்து முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தனித் தீர்மானம், அது தனித் தீர்மானம் அல்ல; தமிழ்நாட்டின் தீர்மானம். எனவே, இது கல்வி உரிமை தீர்மானம் என்று சொல்லி வரவேற்று அமைகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## நீலகிரி மாவட்டக் கழக துணைச் செயலாளர்

# ஜே.ரவிகுமார் தந்தை என்.பி.ஜம்புலிங்கம் மறைவு!

### தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 10-

நீலகிரி மாவட்டக் கழக துணை செயலாளர், உதகை நகரமன்ற துணைத் தலைவர் ஜே.ரவிகுமார் அவர்களின் தகப்பனார், கழக மூத்த முன்னோடி என்.பி.ஜம்புலிங்கம் (85) அவர்களின் மறைவிற்கு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

நீலகிரி மாவட்டக் கழக துணைச் செயலாளரும் - உதகை நகர்மன்ற துணைத் தலைவருமான ஜே. ரவிகுமார் அவர்களின் தந்தையாரும் - கழக மூத்த முன்னோடியுமான என்.பி.ஜம்புலிங்கம் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் ஜே.ரவிகுமார் அவர்களின் குடும்பத்தார்க்கும் - நீலகிரி மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## நீலகிரி மாவட்டக் கழக துணைச் செயலாளர்

# ஜே.ரவிகுமார் தந்தை என்.பி.ஜம்புலிங்கம் மறைவு!

### மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் - கழகத்தினர் அஞ்சலி!

நீலகிரி, ஜன. 10- நீலகிரி மாவட்டக் கழக துணைச் செயலாளர் - உதகை நகரமன்ற துணைத் தலைவர் ஜே.ரவிகுமார் தந்தை கழக மூத்த முன்னோடி என்.பி.ஜம்புலிங்கம் (85) அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (9.1.2025) காலை இயற்கை எய்தினார் என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் மாவட்டக் கழக செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், நகரக் கழக, பகுதிக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.



நீலகிரி மாவட்ட துணை செயலாளர் ஜே.ரவிகுமார் தந்தை கழக மூத்த முன்னோடி மறைந்த என்.பி.ஜம்புலிங்கம் அவர்களின் உடலுக்கு நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் கழக நிர்வாகிகளுடன் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியத்தில் ராகவரெட்டிமேடு, கம்மவார்பாளையம் முதல் எஸ்.ஆர் கண்டிகை மேலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு கும்முடிப்பூண்டி துணை மின்நிலையத்தில் இருந்து பிடர் வழியாக ரூபாய் 1 கோடி திட்ட மதிப்பில் அமைக்கப்பட்ட துணைமின்நிலையத்தை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி. ஜெ.கோவிந்தராஜன் இயக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மு.மணிபாலன் எஸ்.ரமேஷ், இரா அறிவழகன், நா.செல்வசேகரன், பி.முத்து மு.பாஸ்கர். எஸ்.ராமஜெயம், எம்.கேசவன் அப்துல்கரீம் காளி பிரதாப், சந்திரமோகன் பாலுமகேந்திரன், நரேந்திரன், இளவரசன், அறிவழகன், குப்பன், கிரிஜாகுமார், பா. பரத்குமார் முகிலன். போண்டா.சிவா, சுகுமாறன், ஜெயராமன், சாமபசிவம், ராஜ்குமார், தமிழ்குடிமகன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.